செய்தி வெளியீடு எண். 54-2018 நாள்: 26.03.2018

## விழுப்புரம் மாவட்டத்தில் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் குடும்பங்களைப் பற்றிய தொடர்ச்சியான ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளதால், புள்ளிஇயல் துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பொதுமக்களை அணுகும்போது சரியான தகவல் அளிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவா் முனைவா்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவா்கள் தெரிவித்துள்ளாா்.

*****

தமிழ்நாடு அரசின் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் மூலம் 26.02.2016 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணை எண்.19ன்படி, தமிழ்நாடு முழுவதும் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையும், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனமும் (MIDS) இணைந்து கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் குடும்பங்களைப் பற்றிய தொடர்ச்சியான ஆய்வு மேற்கொள்ள உள்ளது. அந்த ஆய்வு குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கிய காரணிகளான வாழ்க்கை நிலை, வருவாய், பணி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் இடம்பெயர்ப்பு பற்றிய விவரங்கள் சேகரிக்க இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வீதம் 8 ஆண்டுகளில் நடத்தப்பட உள்ளது.

இந்த ஆய்வினை மேற்கொள்ள புள்ளிஇயல் துறையை சார்ந்த பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பொதுமக்களை அணுகும்போது, பொதுமக்கள் சரியான தகவல்களை அளித்து அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், பொதுமக்கள் அளிக்கும் விவரங்களின் அடிப்படையிலேயே நாட்டின் எதிர்கால திட்டமிடல் செய்யப்படுவதால், இவ்வாய்வின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு பொதுமக்கள் எவ்வித தயக்கமும் இன்றி சரியான தகவல்களை அளிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவா் முனைவா்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவா்கள் கேட்டுக்கொண்டுள்ளாா்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.